இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 314 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஆனி 10 – திங்கள்கிழமை 24 ஜுன் 2024 – கோவை ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 314 : Thiruvalluvar Year - 2055 - Aani 10 - Monday 24 June 2024 - Kovai ★★ 12 Pages ₹ 5.00


## சென்னை மெட்ரோ ரயில்

# 2-ஆம் கட்டத் திட்டத்திற்கு விரைந்து ஒப்புதல் வழங்கிடுவீர்!

### புதுடெல்லியில் நடைபெற்ற நிதி அமைச்சர்கள் மாநாட்டில் – முதல்வரின் கோரிக்கையை எடுத்துரைத்து – அமைச்சர் தங்கம் தென்னரசு வலியுறுத்தல்!

**புதுடெல்லி, ஜூன் 24–**

**“சென்னை மெட்ரோ ரயில் இரண்டாம் கட்டத்திட்டத்திற்கு விரைந்து ஒப்புதல் வழங்கி போதிய நிதி ஒதுக்கீடு செய்யுமாறு” நிதியமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள் டெல்லியில் நடைபெற்ற நிதி அமைச்சர்கள் மாநாட்டில், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் கோரிக்கையை எடுத்துரைத்து பேசும்போது ஒன்றிய நிதியமைச்சரிடம் வலியுறுத்தினார்.**

இம்மாநாட்டில் தமிழ்நாடு நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு பேசியதாவது: –

ஒன்றிய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் அவர்களே! நிதித்துறை இணையமைச்சர் அவர்களே! மாநில அரசுகள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் நிதியமைச்சர்களே! ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசுகளின் மூத்த அலுவலர்களே! வணக்கம்.

ஒன்றிய அரசின் நிதி அமைச்சராகப் பதவியேற்றுள்ள அமைச்சர் அவர்களுக்கு நான் எனது வாழ்த்துகளை மனமாரத் தெரிவித்துக் கொள்கிறேன். அமைச்சர் அவர்கள், நாட்டின் வரலாற்றிலேயே தொடர்ந்து ஏழு நிதிநிலை அறிக்கைகளைத் தாக்கல் செய்யும் முதல் நிதியமைச்சர் என்ற பெருமையை விரைவில் பெறுவார் என்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

இக்கூட்டத்தை ஏற்பாடு செய்ததற்காகவும், எதிர்வரும் ஒன்றிய நிதிநிலை அறிக்கை குறித்தான எமது ஆலோசனைகளைக் கோரியுள்ளதற்கா கவும் ஒன்றிய அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நிதிக் கூட்டாட்சித் தத்துவத்தின் ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாக நடைபெறும் இக்கூட்டத்தில் முன்வைக்கப்படும் எமது பரிந்துரைகளும் எதிர்வரும் ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் பரிசீலிக்கப்பட்டு சேர்த்துக் கொள்ளப்படும் என்று நம்புகிறேன்.

2021-22 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட உரையில், ஒன்றிய நிதி அமைச்சர் அவர்கள் சென்னை மெட்ரோ இரயில் இரண்டாம் கட்டத் திட்டப்பணியை 63,246 கோடி ரூபாய் செலவில், ஒன்றிய அரசு திட்டமாக அறிவித்திருந்தார். 21.11.2020 அன்று சென்னையில் ஒன்றிய உள்துறை அமைச்சரால் இத்திட்டத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இத்திட்டம் 17.08.2021 அன்று திட்ட முதலீட்டு வாரி யத்தால் (PIB) பரிந்துரைக்கப்பட்டிருப்பினும், பொருளாதார விவகாரங்களுக்கான ஒன்றிய அமைச்சரவைக் குழுவின் (CCEA) ஒப்புதலுக்காகக் கடந்த மூன்று ஆண்டுகளாக, காத்திருக்கிறது. மேற்சொன்ன ஒப்புதல் நிலுவை யிலுள்ள போதும், அதற்கான முழுச் செலவினமும் மாநிலத்தின் சொந்த நிதியிலிருந்து தமிழ்நாடு அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சென்னை மெட்ரோ ரயில் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்குவதில் ஏற்பட்டுள்ள தாமதம், தமிழ்நாடு அரசிற்கு மாநில நிதியில் கடுமையான நிதிச் சுமையை ஏற்படுத்துவதுடன், இத்திட்டத்தின் செயல் பாட்டின் வேகத்தையும் குறைத்துவிடுவது கவலைக்குரியது, எனவே முதலில் முன்மொழியப்பட்டபடியே இத்திட்டத்திற்கு உடனடியாக ஒப்புதல் அளிக்க வேண்டுமெனவும், 2024-25 ஒன்றிய வரவு செலவுத் திட்டத்தில் இத்திட்டத்திற்கான போதிய நிதியொதுக்கீடுகள் செய்யப்படுவதை உறுதிசெய்ய வேண்டுமெனவும் ஒன்றிய அரசை நான் வலியுறுத்துகிறேன்.



**பேரிடர் நிதி : தமிழ்நாட்டிற்கு பெரும் அநீதி!**

சென்ற ஆண்டு அடுத்தடுத்து இரண்டு பெரும் இயற்கைப் பேரிடர்களை தமிழ்நாடு எதிர்கொள்ள நேரிட்டதால், மாநில அரசின் நிதிநிலைமை மிகமோசமாக பாதிக்கப்பட்டது. தமிழ்நாட்டில் நேரிட்ட இவ்விரு பேரிடர்கள் ஏற்படுத்திய பாதிப்பின் தாக்கத்தை விவரித்து விரிவான இரண்டு அறிக்கைகளை அளித்து, பேரிடர் நிவாரண நிதியாக 37,906 கோடி ரூபாயை மாநில அரசு கோரியிருந்த நிலையில், ஒன்றிய அரசு மிகக் குறைவாக 276 கோடி ரூபாயை மட்டுமே விடுவித்துள்ளது. பேரிடர்களின் அளவையும் உட்கட்டமைப்பு மற்றும் மக்களின் வாழ்வாதாரங்களுக்கு ஏற்பட்டுள்ள மாபெரும் சேதத்தையும் கருத்தில் கொள்கையில், இந்த இழப்பீட்டுத்தொகை தேவையைவிட மிகக் குறைவானது மட்டுமின்றி இது தமிழ்நாட்டிற்கு இழைக்கப்பட்ட பெரும் அநீதியாகும். தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து விடுவிக்கப்படும் நிதி என்பது, மாநிலங்களுக்குச் அளிக்க வேண்டிய உரிய நியாயமான தொகையாகும். எனவே பேரிடர் பாதித்த மாநிலங்களுக்கு கூடுதலாக போதுமான நிதியை ஒதுக்கீடு செய்யுமாறு ஒன்றிய அரசை நான் கேட்டுக்கொள்கிறேன். வரவிருக்கும் வரவு செலவுத் திட்டத்தில் தமிழ்நாட்டில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தேவையான சீரமைப்பு பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு, தமிழக அரசுக்கு 3,000 கோடி ரூபாயை ஒன்றிய அரசு ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாநில அரசுகளின் மீது நிதிச்சுமை அதிகரிக்கிறது!**

சரக்கு மற்றும் சேவை வரி அறிமுகப்படுத்துவதற்கு முன்னர் ஈட்டிய வரி வருவாய் அளவினை புதிய வரி முறையில் எட்டப்படும் வரையில், மாநிலங்களுக்கு போதுமான அளவில் இழப்பீடு வழங்கப்படும் என்ற நியாயமான எதிர்பார்ப்பில் மட்டுமே மாநிலங்கள் தங்களது வரிவிதிக்கும் அதிகாரங்களை விட்டுக்கொடுக்க ஒப்புக்கொண்டன. ஆனால், ஒன்றிய அரசு 30.06.2022 அன்று சரக்கு மற்றும் சேவை வரிக்கான இழப்பீட்டினை நிறுத்தியதன் விளைவாக ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாடு அரசுக்கு ஏறத்தாழ 20,000 கோடி ரூபாய் வருவாய் குறைவு ஏற்படுகிறது. சரக்கு மற்றும் சேவை வரி நடைமுறைக்கு பின்னர், மாநிலங்கள் வருவாய் பற்றாக்குறையினால் பாதிக்கப்படும் வேளையில், ஒன்றிய அரசு, தனது வருவாய் வசூலை பகிர்ந்தளிக்கக்கூடிய வரித் தொகுப்பிலிருந்து மேல்வரி மற்றும் கூடுதல் கட்டணங்களை விதிப்பதன் வாயிலாக மாற்றி வருகிறது. இதனால், 201112 ஆம் ஆண்டில் 10.4% ஆக இருந்த மேல்

வரி மற்றும் கூடுதல் கட்டணம் 2022 23 ஆம் ஆண்டில் 20.28% ஆக மொத்த வரி வருவாயின் சதவீதம் அதிகரித்துள்ளது. மாநிலங்களின் வரி பகிர்வில் தங்களின் நியாயமான பங்கைப் பெறும் வகையில், வரிவிதிப்புக்கான அடிப்படை வீதங்களில் மேல்வரி மற்றும் கூடுதல் கட்டணங்களை இணைக்குமாறு ஒன்றிய அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

மேல் வரி மற்றும் மாநிலங்களுக்கான ஒன்றிய வரிகளின் பங்கானது, கூடுதல் கட்டணங்களை வரைமுறையின்றி அதிகரிப்பதின் மூலம் குறைந்து வருகிறது, அதே வேளையில் ஒன்றிய அரசின் நிதியுதவிடன் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கான நிதிச்சுமையை மாநில அரசுகளின் மீது ஒன்றிய அரசு படிப்படியாக சுமத்தி வருகிறது. பல்வேறு திட்டங்களுக்கான ஒதுக்கீடுகள் இன்றைய செலவினங்களின் அடிப்படையில் போது மானதாக இல்லாததால், திட்டச் செலவினங்களில் பெரும்பகுதியை மாநில அரசுகள் ஏற்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது.


தொடர்ச்சி 4 ஆம் பக்கம்


## 4 மாநிலங்களின் சட்டமன்றத் தேர்தல்!

# பணிகளைத் தொடங்கியது தேர்தல் ஆணையம்!

### செப்டம்பர், அக்டோபரில் தேர்தல் நடைபெற வாய்ப்பு!

புதுடெல்லி, ஜுன் 24 -

மக்களவைத் தேர்தல் நடைபெற்று முடிந்துள்ள நிலையில், மகாராஷ்டிரா, அரியானா உள்ளிட்ட 4 மாநிலங்களின் சட்டமன்றத் தேர்தலுக்கான ஆயத்த பணிகளை தேர்தல் ஆணையம் தொடங்கியுள்ளது.

அரியானா, மகாராஷ்டிரா, ஜார்க்கண்ட் மாநிலங்களில் சட்டமன்ற பதவிக்காலம் முறையே நவம்பர் 3, நவம்பர் 26 மற்றும் ஜனவரி 5 ஆகிய தேதிகளில் நிறைவடையவுள்ளது. மேலும், ஜம்மு காஷ்மீரில் செப்டம்பர் மாத இறுதிக்குள் தேர்தலை நடத்திமுடிக்க உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. எனவே, 4 மாநிலங்களிலும் செப்டம்பர், அக்டோபரில் சட்டமன்றத் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

இந்நிலையில், சட்டமன்றத் தேர்தலுக்கான ஆயத்த பணிகளை தேர்தல் ஆணையம் தொடங்கியுள்ளது.

இதற்காக வாக்காளர் பட்டியலை புதுப்பிப்பதற்கு ஜுலை ஒன்றாம் தேதி தகுதிநாளாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஜம்மு காஷ்மீரிலும் ஜுலை ஒன்றாம் தேதியை தகுதி நாளாக கொண்டு வாக்காளர் பட்டியலை புதுப்பிக்க தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

## யு.ஜி.சி. ‘நெட்’ வினாத்தாள்

# ரூ.5 லட்சத்திற்கு விற்பனை!

புதுடெல்லி, ஜுன் 24 -

யு.ஜி.சி. ‘நெட்’ தேர்வுக்கான வினாத்தாள் 5 லட்சம் ரூபாய்க்கு மேல் விற்பனை செய்யப்பட்டதாக முதல் கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

கடந்த 18ஆம் தேதி, 11 லட்சம் மாணவர்கள் எழுதிய நெட் தேர்வு 19ஆம் தேதி ரத்து செய்யப்பட்டது. டார்க் நெட், டெலிகிராம் சமூக ஊடகங்கள் மூலம் கேள்வித்தாள் விற்பனை செய்யப்பட்டதாக எழுந்த தகவலை தொடர்ந்து இந்த தேர்வு ரத்து செய்யப்பட்டது.

இந்நிலையில், 18 ஆம் தேதி நடைபெற்ற தேர்வின் வினாத்தாள் 16ஆம் தேதி வெளியானது தற்போது விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த வினாத்தாள் 5 லட்சம் ரூபாய்க்கு மேல் விற்பனை செய்யப்பட்டதாகவும் சி.பி.ஐ. நடத்திய முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. நெட் தேர்வுக்கான கேள்வித்தாள் தயாரித்தவர்களிடமும், அதனை கையாண்ட தேசிய தேர்வு முகமை அலுவலர்களிடமும் சி.பி.ஐ. விசாரணை நடத்தி வருகிறது.

# தமிழ்நாட்டில் கனமழைக்கு வாய்ப்பு!

சென்னை, ஜுன் 24 –

தமிழ்நாட்டில் இன்றும் நாளையும் ஓரிரு இடங்களில் மிக கனமழை பெய்யக்கூடும் என இந்திய வானிலை மையம் தகவல் தெரிவித்துள்ளது. 12 முதல் 20 செ,மீ வரை மழை பெய்யக் கூடும் என ஆரஞ்சு அலர்ட் விடுத்துள்ளது. தமிழ்நாட்டில் ஜுன் 24, 25, 26ம் தேதிகளில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

தமிழ்நாட்டில் தென் மேற்கு பருவ மழை மீண்டும் தீவிரம் அடைய உள்ளது. அதிலும் மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டியுள்ள, காவிரி நீர்ப் பிடிப்பு பகுதிகளில் மழை பெய்ய அதிகளவில் வாய்ப்பு இருப்பதாக சொல்லப்படுகிறது. அந்த வகையில் மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக இன்று முதல் 26 வரை மழைக்கான வாய்ப்பு இருக்கிறது.

அதில் இன்றும், நாளையும் 8 மாவட்டங்களில் கனமழை பெய்யக் கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இன்றும், நாளையும் தமிழ்நாட்டில் சில இடங்களிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும் இடி மின்னலுடன் மிதமான மழையும், நீலகிரி, கோவை மாவட்ட மலைப்பகுதிகளில் கன முதல் மிக கனமழையும், திருப்பூர், தேனி, திண்டுக்கல், தென்காசி, நெல்லை மாவட்டங்களின் மலைப்பகுதிகள், கன்னியாகுமரியில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

## கள்ளக்குறிச்சி சம்பவம்: அரசு வெளிப்படைத் தன்மையுடன் செயல்படுகிறது!

# சி.பி.ஐ. விசாரணை தேவையில்லை!

### தலைமைச் செயலகத்தில் – சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி!

**சென்னை, ஜுன் 24 -**

**தலைமைச் செயலகத்தில் சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி சட்டமன்றப் பேரவை வளாகத்தில் செய்தியாளர்களை சந்தித்து அளித்த பேட்டி வருமாறு:-**

கள்ளக்குறிச்சியில் மெத்தனால் என்ற ரசாயனம் கலந்த கலவையை அருந்தியதால் அங்கிருக்கக்கூடிய 52 பேர் இறந்திருப்பது என்பது வருந்தத்தக்க ஒரு செயல். விரும்பத்தகாத ஒரு செயல், யாரும் அதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். ஆனால் அதை கடந்த இரண்டு நாட்களாக பாராளுமன்ற தேர்தலில் 40க்கு 40 தொகுதிகளில் தோல்வியை கண்டிருக்கின்ற ஒரே காரணத்தினால் மக்கள் மன்றத்தில் தோல்வியை கண்டு விட்டோம், சட்டமன்றத்தில் ஏதாவது பிரச்சினையை கிளப்பவேண்டும் என்பதற்காக முன்னாள் முதலமைச்சர், இன்றைய எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி இன்றைக்கு இரண்டு நாட்களாக சட்டமன்றத்தில் இல்லாத குற்றச்சாட்டுகளை எல்லாம் கூறி சட்டமன்றத்தை முடக்க வேண்டும் என்ற முயற்சியில் ஈடுபட்டு, அதனால் என்ன நடக்கிறது என்பதை நீங்களே பார்க்கிறீர்கள்.

**அப்பட்டமான பொய்!**

எங்களுக்கு முதலமைச்சர் பேசுவதற்கு வாய்ப்பு தரவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் சொல்கிறார். நேற்று எல்லா பத்திரிகையாளர்களும் சட்டமன்றத்தில் தான் இருந்தீர்கள், வெளிநடப்பு செய்த பிறகு தமிழ்நாடு முதலமைச்சர் , அவர்களை மீண்டும் அழைத்து தங்களுடைய கருத்தை சொல்வதற்கு வாய்ப்புகளை தாருங்கள் என்று சபாநாயகர் அவர்களிடம் கேட்ட முதலமைச்சர்தான் தமிழ்நாடு முதலமைச்சர். எனவே, எதிர்க்கட்சியினர் தங்களுக்கு வாய்ப்பு தரவில்லை என்று சொல்வது அப்பட்டமான பொய்யாகும்.

அதைப்போல, அவர்களை உட்காருங்கள், உட்காருங்கள் என்று சொன்ன சட்டப் பேரவைத் தலைவர் அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர் எந்தக் கருத்தைச் சொல்ல விரும்பினாலும் சொல்லலாம் என்று சொன்னார். காரணம் எப்போதுமே, கேள்வி நேரத்தில் யாரும் எந்த பிரச்சினை எழுப்புவதும் கிடையாது. ஜீரோ அவர்சில் தான் பிரச்சினையை பற்றி பேசுவார்கள். ஆனால், இவர்கள் வேண்டுமென்றே கேள்வி நேரத்தில் பிரச்சினையை கிளப்பியபோது எல்லாம் சட்டப் பேரவைத் தலைவர் அவர்களை முற்றுகையிட்டபோது, சட்டப்பேரவைத் தலைவர் எதிர்க்கட்சித் தலைவர் ஏதாவது பேச விரும்பினால், பேசலாம் என்று கருத்துக்களை சொல்வதற்கு வாய்ப்பை தந்தாரே தவிர அங்கே வாய்ப்பு மறுக்கப்படவில்லை என்பதை தொலைக்காட்சியில் பார்த்தவர்களுக்கு நன்கு தெரியும். இங்கே இருக்கக் கூடிய பத்திரிகையாளர் மற்றும் ஊடகத் துறையைச் சார்ந்தவர்களுக்கும் தெரியும்.

**ஜனநாயகத்திற்கு மதிப்புக் கொடுக்கும் முதல்வர்!**

எனவே, தமிழ்நாடு முதலமைச்சர் ஜனநாயகத்திற்கு எந்த அளவுக்கு மதிப்பு கொடுக்கிறார் என்பது உங்களுக்குத் தெரியும். கடந்த ஆட்சியில் என்ன நடந்தது, நாங்கள் எழுந்தாலே வெளியே தூக்கிப் போடுகின்ற நிலைமை இருந்தது. எங்களை 3 நாட்கள், 1 வாரம் சஸ்பெண்ட் செய்கின்ற நிலைமைகள் எல்லாம் இருந்தது. நேற்று போல நாங்கள் முற்றுகையிட்டிருந்தால் உடனடியாக 1 வாரம் சஸ்பெண்ட் அல்லது தொடர் முழுவதும் சஸ்பெண்ட் என்று சொல்வார்கள். ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்ட நம்முடைய முதலமைச்சர், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சட்டமன்றத்தில் தங்களுடைய வாய்ப்புகளை தர வேண்டும் என்று எண்ணுகின்ற முதலமைச்சராக இருக்கக்கூடிய காரணத்தினால் பிரச்சினையில் ஈடுபட்ட எதிர்க்கட்சியினரை மன்னித்து திருப்பி அவர்களை சட்டமன்றத்திற்குள் வர அனுமதி தாருங்கள், வந்து தங்கள் கருத்துக்களைச் சொல்லட்டும் என்று சொன்ன பெருந்தன்மைக்கு சொந்தக்காரர் முதலமைச்சர் ஆவார். ஆனால், வெளியில் வந்து என்ன சொல்கிறார்கள்;


தொடர்ச்சி 4 ஆம் பக்கம்


## கள்ளக்குறிச்சி சம்பவம்: இதுவரை

# 8 பேர் கைது! 3 பேர் மீது கொலை வழக்குப் பதிவு!

### முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடும் நடவடிக்கை!

சென்னை, ஜுன் 24 -

விஷச் சாராயம் தயாரிக்க மெத்தனால் விநியோகம் செய்ததாக கைது செய்யப்பட்ட சின்னதுரை, ஜோசப் ராஜா உள்ளிட்ட மூவர் மீது சி.பி.சி. ஐ.டி.காவல்துறையினர் கொலை வழக்கு பதிவு செய்துள்ளனர்.

இவ்வழக்கில் இதுவரை 8 பேர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

கள்ளக்குறிச்சியில் சட்டவிரோதமாக விஷச் சாராயம் விற்ற சம்பவத்தில், தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

அதன்படி, கள்ளக்குறிச்சி சம்பவம் குறித்து ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி கோகுல்தாஸ் தலைமையிலான தனி நபர் ஆணையம் விசாரணை மேற்கொண்டு வருகிறது. அதே போல், சி.பி.சி.ஐ.டி. காவல்துறையினரும் விஷச் சாராயம் விற்பனையில் ஈடுபட்ட நபர்கள் குறித்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில், கள்ளக்குறிச்சி கருணாபுரம் பகுதியில் விஷச் சாராயம் விற்ற கண்ணுக்குட்டி என்கிற கோவிந்தராஜ், அவரது மனைவி விஜயா, அவரின் தம்பி தாமோதரன் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும், விஷச் சாராயம் தயாரிக்க மெத்தனால் விநியோகம் செய்ததாக சின்னதுரை, ஜோசப் என்கிற ராஜா ஆகியோரும், விஷச்சாராய விற்பனையில் தொடர்புடைய மாதேஷ், ஷாகுல் ஹமீது, ராமர் ஆகியோரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த 8 நபர்களிடம் சி.பி.சி.ஐ.டி. காவல்துறையினர் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இதனிடையே, கள்ளக்குறிச்சி சம்பவத்தில் கைது செய்யப்பட்டுள்ள, ராமர், சின்னதுரை, ஜோசப் ராஜா ஆகிய மூவர் மீது சி.பி.சி.ஐ.டி. காவல்துறையினர் கொலை வழக்கு பதிவு செய்துள்ளனர்.

## 7 ஆண்டு பா.ஜ.க. ஆட்சியில் வினாத்தாள்கள் கசிவு:

# 2 கோடி மாணவர்களின் எதிர்காலம் பாதிப்பு!

### கார்கே குற்றச்சாட்டு!

புதுடெல்லி, ஜுன் 24 -

ஒன்றிய பா.ஜ.க.வின் ஆட்சியில் கடந்த 7 ஆண்டுகளில் 70 தேர்வுகளின் வினாத்தாள்கள் கசிந்ததால் 2 கோடி மாணவர்களின் எதிர்காலம் பாதிக்கப்பட்டுள்ளதாக காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே குற்றம் சாட்டியுள்ளார்.



இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், பா.ஜ.க. ஆட்சியில் கல்வி மாஃபியா கும்பல் சுதந்திரமாக ஊழலில் ஈடுபட்டு வருவதாக விமர்சித்துள்ளார்.

கடந்த 7 ஆண்டுகளில் 70 வினாத்தாள்கள் கசிந்ததால் 2 கோடி மாணவர்களின் எதிர்காலம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் குற்றம்சாட்டியுள்ளார்.

நீட் தேர்வு வினாத்தாள் கசிந்த விவகாரம், இளைஞர்கள் மீதான மோடி அரசின் அலட்சியத்திற்கான அடையாளம் என்றும் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே குறிப்பிட்டுள்ளார்.